5. அறிவிப்பு.

மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1981).

(2) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/1981).

6. கவன ஈர்ப்புகள்.

(அ) திருப்பூர் பனியன் தொழிற்சாலைகள் மூடப்பெற்றுள்ளது.

"மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஆர். மணிமாறன், என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி ரா. கிருஷ்ணன், கு. ரமணி, கே. ஆர். சுந்தரம், வி. பி. பாலசுப்பிரமணியன், செ. செம்மலை, இரா. தாமரைக்கனி, பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், ஆகியோர் ஓரே பொருள் குறித்து கவனஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. ஆர். மணிமாறன்: தலைவரவர்களே 'திருப்பூரில் பெரும்பாலான பனியன் தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.